# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

### அ.சா. 2 (LW 3)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. மதுரைவீரன்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | திருமன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **20.07.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், ஒய்எம்ஆர் பட்டியில் குடியிருந்து வருகிறேன். தூய்மை பணியாளராக வேலை செய்து தற்போது பணி ஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கில் இறந்த சூர்ய பிரகாஷ் என்ற மாசிலாமணி என் சகலையின் பேரன் ஆவார். கடந்த 2019 ம் வருடம், மாதம், தேதி ஞாபகம் இல்லை, இரவு 11.00 மணி அளவில் நாட்டாமை பெருமாள் பேரனை வெட்டி விட்டதாக தகவல் கிடைத்து திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றேன். அப்போது இறந்து போன சூர்ய பிரகாஷ் என்ற மாசிலாமணியை பிணவறையில் பார்த்தேன். போலிசார் என்னிடம் பிரேத விசாரணை முடிந்தபிறகு உறவினர்களிடம் பிரேதத்தை ஒப்படைக்கும் போது கையெழுத்து கேட்டார்கள், கையெழுத்து போட்டேன், வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையில் கடந்த 19.03.2019 அன்று நான் திண்டுக்கல் சோலைஹால் ரோட்டில் குடியிருந்து வந்ததாகவும், திண்டுக்கல் மாநகராட்சியில் XL என்ற தனியார் நிறுவனம் துப்புரவு பணி குத்தகைக்கு எடுத்து செய்வதில் நான் துப்புரவு பணி செய்து வந்ததாகவும், அந்த சமயம் சிதரம்பரனார் தெருவில் இருந்த செல்வராஜ் மகன் அஜித்குமார் பின்னர் திண்டுக்கல் பங்காளி மார்க்கெட்டில் குடியிருந்து கொண்டு

அடிக்கடி நெட்டு தெருவிற்கு வந்து ரவுடித்தனம் செய்து கொண்டிருந்ததாகவும் அப்போது எங்கள் தெரு நாட்டாமை பெருமாள் என்பவரின் பேரன் சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணி அஜித்குமாரிடம் எதுக்குடா நீ வேறு தெருவில் இருந்து வந்து எங்கள் தெருவில் வந்து ரவுடி தனம் பண்ணுற என தட்டி கேட்டதாகவும் , அதனால் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும் , அச்சமயத்தில் தெருவிலிருந்தவர்கள் சத்தம் போட்டு அஜித்குமாரை அனுப்பி விட்டதாகவும், பின்னர் 17.03.2019 அன்று மதியம் திண்டுக்கல் ஆர்.எஸ் ரோட்டில் என்.எஸ் கம்யூனிட்டி ஹால் அருகே உள்ள டாஸ்மாக் கடையில் அஜித்குமாருக்கும் சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணிக்கும் தகராறு ஏற்பட்டதாகவும் சுற்றியிருந்தவர்கள் அவர்களை சத்தம் போட்டு அனுப்பி விட்டதாகவும், பின்னர் 18.03.2019 அன்று சுமார் 09.05 மணிக்கு நானும் எங்கள் தெருவைச் சேர்ந்த சண்முகம் மகன் நாகராஜனும் எங்களுடைய சொந்த வேலையாக ஆர்.எஸ் ரோட்டில் என்.எஸ் கம்யூனிட்டி ஹால் அருகில் நடந்து போய்க் கொண்டிருந்ததாகவும், அச்சமயத்தில் எங்களுக்கு முன்னால் சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியும் அவரது அப்பா பாண்டியனும் நடந்து சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது செல்வராஜ் மகன் அஜித்குமார் கையில் அரிவாளுடனும் மாலைப்பட்டியை சேர்ந்த சேதுராமன் மகன் ஜெகன் என்ற ஜாக் கையில் கத்தியுடனும் எங்களை ஒதுங்கி சென்று சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியின் அருகில் சென்று அவனது பெயரை சொல்லி கூப்பிட்டதாகவும் சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியும் அவரது அப்பாவும் திரும்பி பார்த்த போது அஜித்குமார் சூர்யபிரகாசிடம் என்னை போட்டு தள்ளுறதுக்கு நீ ஆள் வைச்சிட்டியா, இத்தோடு செத்து தொலைந்து போடா என கையில் வைத்திருந்த அரிவாளால் சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியின் தலையில் மாறி மாறி வெட்டியதாகவும் உடனிருந்த ஜெகன் என்ற ஜாக் தன் கையில் வைத்திருந்த கத்தியால் சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியை கழுத்து, தலை, வயிறு, இடது கால் ஆகிய இடங்களில் மாறி, மாறி குத்தியதாகவும், திரும்பவும் அஜித்குமார் அரிவாளால் மாசிலாமணியின் தோள்பட்டை , புடனி, மற்றும் கைகளில் மாறி , மாறி வெட்டியதாகவும் அப்போது சூர்யபிரகாசின் அப்பா பாண்டியனும் ,அருகிலிருந்தவர்களும் சத்தம் போட்டுக் கொண்டு அவர்களை பிடிக்க வந்த போது அஜித்குமார் மற்றும் ஜெகன் என்ற ஜாக் தங்கள் கையில் வைத்திருந்த அரிவாள் மற்றும் கத்தியை தூக்கி காட்டி எவனாவது எங்கள் பக்கத்தில் வந்தால் உங்களையும் போட்டு தள்ளி விடுவோம் என மிரட்டியதாகவும் பின்னர் ராஜ் ஸ்கேன் சிக்னல் கிட்ட எங்க தெருவை சேர்ந்த கிருஷ்ணன் மகன் தமிழ் மணி என்ற விக்னேஷ் மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்து தயாராக வைத்திருந்ததாகவும் அதில் ஏறி மூன்று பேரும் தப்பி சென்றதாகவும் பின்னர் இரவு 09.30 மணி சுமாருக்கு அந்த வழியாக வந்த ஒரு ஆட்டோவை பிடித்து சூர்யபிரகாஷ் என்ற மாசிலாமணியை ஏற்றிக் கொண்டு திண்டுக்கல் பெரியாஸ்பத்திரியில் சேர்த்ததோடு அவரை பரிசோதித்த மருத்துவர் சூர்யபிரகாஷ்

**என்ற மாசிலாமணி இறந்து விட்டதாகவும் அதன்பிறகு பாண்டியன் திண்டுக்கல வடக்கு காவல்நிலையத்தில் மேற்படி கொலை செய்தவர்கள் மீது புகார் கொடுத்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.21 20:44:22 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.